| *ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்* | *நாள்* :01.02.08 |
|---|---|

எங்களுடைய இறைவா! அவர்களுக்கு உனது அடையாளங்களை எடுத்தோதி, அவர்களுக்கு வேதத்தையும் ஞானத்தையும் கற்றுக் கொடுத்து அவர்களைத் தூய்மைப்படுத்தும் ஒரு தூதரை அவர்களிலிருந்தே அவர்களிடம் தோற்றுவிப்பாயாக. நிச்சயமாக நீயே வல்லோனும், ஞானமிக்கவனுமாவாய். (2:130)

எவ்வாறெனில், நம்முடைய வசனங்களை உங்களுக்கு ஓதிக்காட்டி உங்களைத் தூய்மைப்படுத்தி உங்களுக்கு வேதத்தையும் ஞானத்தையும் கற்பித்து நீங்கள் அறியாதவற்றையெல்லாம் உங்களுக்கு கற்பிக்கும் ஒரு தூதரை உங்களிலிருந்தே உங்களுக்கு நாம் அனுப்பி வைத்தோம். (2:152)

நான் தற்போது ஓதிய இந்த வசனங்களில் முதலாவது ஓதப்பட்ட வசனத்தில் ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களின் துஆ இருக்கின்றது. அதன் கருத்து கடந்த சில குத்பாக்களில் கூறப்பட்டிருக்கின்றது. இரண்டாவதாக, நான் ஓதிய வசனத்தில் இந்த துஆ ஏற்றுக்கொள்ளப்பட்டதன் அடையாளமாக நாம் அந்த தூதரை அனுப்பி விட்டோம் என்ற அல்லாஹ்வின் அறிவிப்பு இருக்கின்றது. அந்த தூதர் ஹஸ்ரத் இஸ்மாயில் (அலை) அவர்களின் சந்ததிகளிலிருந்து தோன்றினார். அவர் உலகில் ஒரு மகத்தான புரட்சியை ஏற்படுத்தினார். இந்த துஆ குறிப்பிடப்பட்டுள்ள வசனத்திலும், துஆ ஏற்றுக் கொள்ளப்பட்டதாக அல்லாஹ் அறிவித்துள்ள இந்த வசனத்திலும் உள்ள ஒழுங்குமுறை வரிசையில் கொஞ்சம் வித்தியாசம் இருக்கின்றது. ஆனால், இதில் நுட்பமான ஞானம் இருக்கின்றது. ஞானமிக்க இறைவனின் எந்த பணியும் நுட்பமான ஞானமில்லாமல் அமையாது. இதிலுள்ள சொற்கள் தாமாகவே முன்னும் பின்னுமாக அமையவில்லை. அவை காரணமில்லாமல் அமையவில்லை. அந்த துஆவில் அந்த மகத்தான தூதரின் நான்கு சிறப்பு அம்சங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அந்த நான்கு சிறப்பு அம்சங்களும் எந்த அளவு உயர்வான நிலையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் இருந்ததென்றால் அந்த அம்சங்கள் வேறு எவரிடமும் இந்த அளவு உயர்வான நிலையில் இருக்கவில்லை. வேறு எவராலும் இவ்விஷயத்தில் அவர்களுடன் போட்டி போட முடியவில்லை. இவை அவர்களுக்குரிய தனிச்சிறப்பு மிக்க சிறப்பம்சங்களாக இருந்தன. இந்த இரண்டு வசனங்களிலுமுள்ள ஒழுங்குமுறை வரிசையில் ஏன் வித்தியாசம் இருக்கின்றது என்பதையும் நான் விளக்க இருக்கின்றேன்.

**திருக்குர்ஆனில் இரண்டு இடங்களில் இவ்விஷயம் விளக்கமாக கூறப்பட்டிருக்கின்றது. சூரா ஆலி இம்ரானில் அல்லாஹ் கூறுகின்றான்:**

அல்லாஹ் நம்பிக்கை கொண்டவர்களுக்கு அவர்களிடையே அவர்களிலிருந்து ஒரு தூதரை அனுப்பி நிச்சயமாக அருள் புரிந்துள்ளான். அவர் அவனது அடையாளங்களை ஓதிக் காட்டுகிறார். மேலும் அவர்களைத் தூய்மைப்படுத்துகின்றார். அவர்களுக்கு வேதத்தையும் ஞானத்தையும் கற்றுக் கொடுக்கின்றார். நிச்சயமாக அவர்கள் (இதற்கு) முன்னர் மிகத் தெளிவான வழிகேட்டில் இருந்தனர். (3:165)

**அவ்வாறே சூரா ஜுமுஆவில் அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:**

அவனே எழுதப் படிக்கத் தெரியாத மக்களுக்கு - அவர்கள் இதற்கு முன்னர் தெளிவான வழிகேட்டில் இருந்த போதிலும் - அவனது கட்டளைகளைப் படித்துக் காட்டி, அவர்களைத் தூய்மைப்படுத்தி, அவர்களுக்கு வேதத்தையும் நுட்பமான அறிவையும் கற்றுக் கொடுக்கும் ஒரு தூதரை

அவர்களிலிருந்தே அனுப்பினான். (62:3)

நான் ஏற்கனவே துவக்கத்தில் ஓதிய 2:130 வசனத்திலும் தற்போது நான் குறிப்பிட்ட இரண்டு இடங்களிலும் அதாவது மூன்று இடங்களில் ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் செய்த துஆ ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கான அறிவிப்பு செய்யப்பட்டிருக்கின்றது. இம்மூன்று இடங்களிலும் வசனங்களில் உள்ள ஒழுங்குமுறை வரிசை ஒன்று போல் அமைந்திருக்கின்றது. ஆனால் அது துஆ குறிப்பிடப்பட்டுள்ள 2:130 வசனத்திலுள்ள ஒழுங்குமுறைக்கு மாற்றமாக இருக்கின்றது. ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை)அவர்கள் தனது துஆவில் தஸ்கியா அதாவது தூய்மைப்படுத்துதலை இறுதியில் குறிப்பிட்டுள்ளார்கள். ஆனால், அல்லாஹ் அந்த துஆவை ஏற்றுக்கொண்டு அவர்கள் அனுப்பும்படி அல்லாஹ்விடம் கேட்ட அந்த மகத்தான தூதர் இந்த இந்த பணிகளை செய்கின்றார் என்று அல்லாஹ் குறிப்பிட்டுக் கூறும்போது தூய்மைப்படுத்துதலை வசனங்களை எடுத்தோதியதற்கு அடுத்த படியாக குறிப்பிட்டுக் கூறுகின்றான். இந்த வித்தியாசம் தொடர்பாக சில திருக்குர்ஆன் விரிவுரையாளர்கள் தங்கள் கருத்தைக் கூறியுள்ளார்கள். ஆனால் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இது தொடர்பாக மிக விளக்கமாக எடுத்துக் கூறியுள்ளார்கள்.

தூய்மைப்படுத்துதலை வசனங்களை எடுத்தோதுவதற்கும் வேதத்தையும் ஞானத்தையும் கற்றுக் கொடுப்பதற்கும் இடையில் வைப்பதன் காரணம் இந்த நான்கு விஷயங்களையும் ஒன்றுபோல் எவரும் கருதிவிடக் கூடாது என்பதற்காகவேயாகும். மாறாக, இவை நான்கும் வெவ்வேறு விஷயங்களாகும். இரண்டாவதாக, வசனங்களை எடுத்தோதுவதை முதலில் வைப்பதற்கு காரணம் எவரிடம் இந்த வசனங்கள் கூறப்படுகின்றதோ அவர்களை தூய்மைப் படுத்துவதற்காக தயார் செய்ய வேண்டியதுள்ளது. எனவேதான், வசனங்களை எடுத்தோதுவதை குறிப்பிட்ட பிறகு தூய்மைப்படுத்துதலை அல்லாஹ் வைத்துள்ளான். ஏனென்றால், நம்பிக்கையாளர்களின் முதல் பண்பாகிய தூய்மைப்படுத்துதலை நம்பிக்கையாளர்கள் முதலில் கடைபிடிக்க வேண்டும். ஏனென்றால், நல்ல பண்புகளை மேற்கொண்டு நடப்பதற்கு முன்பு தீய பழக்கங்களை கைவிடுவது அவசியமாகும். இதற்கு பிறகு கற்றுக் கொடுப்பது வைக்கப் பட்டுள்ளது. ஏனென்றால், ஈமான் கொண்ட பிறகு கல்வி, ஞானம் கற்றுக் கொள்ளப்படுகின்றது என்றாலும் சூரா பக்கராவில் (2:130 வசனத்தில்) கற்றுக் கொள்வதை தூய்மைப்படுத்துவதற்கு முன்பு குறிப்பிட்டுக் கூறியதற்கு காரணம் இப்படிப்பட்ட நற்பண்புகளை ஒருவர் மேற்கொண்டு செயல்படுவது மிகவும் அவசியமானது என்பதை உணர்த்துவதற்கேயாகும்.

இவ்வாறே மற்ற ஒன்றிரண்டு விரிவுரையாளர்களும் இந்த ஒழுங்குமுறை வரிசையில் அமைந்துள்ள சொற்கள் தொடர்பாக சுருக்கமாக விளக்கிக் கூறியிருக்கின்றார்கள். ஆனால், இந்த வித்தியாசத்தை மிகத் தெளிவாக எடுத்துக் கூறும் வகையில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் மிகவும் விளக்கமாக விரிவுரை வழங்கியுள்ளார்கள். அதிலிருந்தும் பலன்பெற்றவாறு நான் அதனை விளக்கவுள்ளேன்.

ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் செய்த துஆவின் மிக முக்கிய நோக்கம் என்னவென்றால், அந்த மகத்தான தூதர் தோன்றிய பிறகு அவர் தன் மீது இறங்குகின்ற வஹீயை எடுத்தோதுவார். பிறகு தனக்கு ஆதரவாக வெளிப்படும் அடையாளங்களையும் அற்புதங்களையும் அவர் மக்கள் முன் வைக்கின்றார். பிறகு அவருக்கு அவ்வப்போது அவருக்கு இறங்கும் இறைகட்டளைகளின் நுட்பமான அவர் விளக்கிக் கூறுகின்றார். இறுதியில், அந்த இறையறிவிப்புகளைக் கேட்டு அந்த நபிக்கு ஆதரவாக வெளிப்படும் அடையாளங்களைப் பார்த்து இறைவனது கட்டளைகளிலுள்ள நுட்பமான ஞானங்களைப் புரிந்து அந்த நபியின் மூலமாக தயாராகும் ஜமாஅத்திற்கு அல்லாஹ் தூய்மையை வழங்குகின்றான். இந்த தூய மக்களின் ஜமாஅத் பிறகு இந்த தூதுச் செய்தியை மற்றவர்களுக்கும் எட்ட வைக்கின்றது. இதன் காரணமாக அது வெற்றி பெறுகிறது. ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் செய்த துஆவில் தஸ்கியா அதாவது தூய்மைப்படுத்துதலை இறுதியாக வைத்ததற்கான காரணமும்

இதுவேயாகும்.

ஆனால், அல்லாஹ் இந்த துஆவை ஏற்றுக்கொண்டது தொடர்பாக அறிவிக்கின்றபோது அதில் ஈமானின் வளர்ச்சியையும் ஆன்மீகத்தையும் முதலில் குறிப்பிட்டுக் கூறுகின்றான். வெளிப்படையான அறிவு பற்றிய விஷயங்களை இதற்குப் பிறகுதான் குறிப்பிடுகின்றான். எனவே, ஈமானிலும் ஆன்மீகத்திலும் வளர்ச்சியடைவதற்கும் இறைஞானம் உருவாவதற்கும் வஹீயின்மீது நம்பிக்கை கொள்வது அவசியமானதாகும். மறைவானவற்றின் மீது நம்பிக்கை கொள்ளும் போதுதான் இறை அடையாளங்களையும் அற்புதங்களையும் காண்பதற்கான பார்வையும் வழங்கப்படுகிறது. இறை அடையாளங்களும் அற்புதங்களும் தென்படும்போதுதான் ஒருவரது நஃப்ஸ் தூய்மையடைய முடியும். அந்த தூய்மையில் அவர் முன்னேறும்போதுதான் அத்துடன் இறைபண்புகளை மேற்கொண்டு நடப்பதற்கு அவர் முயற்சி செய்வார். அல்லாஹ்வின் நற்பண்புகளை மேற்கொண்டு நடக்கும்போது ஈமானில் மேலும் வளர்ச்சி ஏற்படும். எல்லா விதமான மனஇச்சைகளின் அழுக்குகளிலிருந்தும் அவர் தூய்மையடைந்து விடுவார். எனவே, வேதத்தையும் ஞானத்தையும் கற்றுக் கொடுப்பதற்கு முன்னர் தஸ்கியா அதாவது தூய்மைப்படுத்துதல் தொடர்பாக அல்லாஹ் கூறியதற்கான காரணம் இதுவேயாகும்.

வேதத்தைப் படிப்பதும் அதை புரிய முயற்சி செய்வதும் அதிலிருந்து ஞானங்களை தேடுவதும் வெளிப்படையான அறிவுடன் தொடர்புள்ள விஷயங்களாகும். எனவே வேதத்தையும் ஞானத்தையும் கற்றுக் கொடுப்பதை இறுதியில் வைத்து ஒரு மனிதன் தொழுகை, நோன்பு, ஸக்காத், ஹஜ் போன்ற இறைகட்டளைகளை பேணுவதில் உண்மையான நோக்கம் அதன் ஞானத்தை புரிய வேண்டும் என்பதல்ல. மாறாக, அதன் உண்மையான நோக்கம் தனது நஃப்பை தூய்மைப்படுத்துவதேயாகும் என்பதை அல்லாஹ் சைகையாக சுட்டிக் காட்டுகின்றான். ஒருவர் வெளிப்படையில் மிக நீண்ட தொழுகையை தொழுகின்றார். ஆனால், அவரது நஃப்ஸை அவர் சீர்திருத்தவில்லையென்றால் அல்லது ஸக்காத் கொடுக்கும் அவர் அல்லாஹ் அனுமதிக்காத வழிகளில் செல்வத்தை சம்பாதிக்கின்றாரென்றால் அல்லது ஹஜ் செய்த அவர் தனது உள்ளத்தில் தான் ஹாஜி என்பது மற்றவர்களுக்கும் தெரிய வர வேண்டும் என்று நினைக்கின்றாரென்றால் அல்லது தனது வியாபாரம் நன்றாக நடைபெற வேண்டும் என்பதற்காக ஹஜ் செய்தால் இவையாவும் பலனற்றதாக ஆகி விடும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஒரு சம்பவத்தை கூறினார்கள். அவர்கள் ஹஜ் செய்ய சென்ற போது அவர்களுடன் ஒரு இளைஞரும் ஹஜ் செய்ய வந்திருந்தார். ஆனால் அந்த இளைஞர் தொழவில்லை. துஆக்களையும் செய்யவில்லை. மாறாக, பாடல்களைப் பாடிக் கொண்டிருந்தார். அப்போது ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் அந்த இளைஞரிடம் இதற்காகவா நீங்கள் ஹஜ் செய்ய வந்தீர்கள் என்று கேட்டார்கள். அதற்கு அவர் விஷயம் என்னவென்றால் நான் ஒரு கடையை நடத்தி வருகின்றேன். எனது வியாபாரத்தில் என்னுடன் போட்டி போட்டுக்கொண்டு இன்னொரு நபரும் அதே வியாபாரத்தை செய்து வருகின்றார். அந்த நபர் ஹஜ் செய்ததன் காரணமாக அவருக்கு வியாபாரம் நன்றாக நடந்து வருகிறது. எனது தந்தையும் நீயும் ஹஜ்ஜுக்கு செல் என்று கூறினார்கள். எனக்கு ஹஜ் என்றால் என்னவென்றே தெரியாது. எனது வியாபாரம் நன்றாக நடக்க வேண்டும் என்பதற்காகவே நான் ஹஜ் செய்ய வந்துள்ளேன் என்று கூறினார். எனவே, இத்தகைய ஹஜ் செய்வதால் இந்த வேதத்தின் போதனை களின்படி செயல்படுவது பலனற்றதாகி விடும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும் ஒரு ஹஜ் செய்த நபர் பற்றி கூறியுள்ளார்கள். ஹஜ் செய்த அவர் இன்னொருவரையும் விருந்துக்கு அழைத்தார். ஹஜ் செய்த அந்த நபர் பணக்காரராக இருந்தார். விருந்துக்கு வந்த அந்த பெரியவரின் முன்னிலையில் இவர் தனது வேலைக்காரரிடம் இந்த பொருளை நான் முதலாவதாக ஹஜ் செய்த போது கொண்டு வந்த தட்டில் வைத்து கொண்டு வா என்று கூறினார். கொஞ்ச நேரம் கழிந்ததும் இந்த பொருளை நான் இரண்டாவதாக ஹஜ் செய்த போது கொண்டு வந்த தட்டில் வைத்து கொண்டு வா என்று கூறினார். பிறகு சிறிது நேரம்

கழிந்ததும் இந்த பொருளை நான் மூன்றாவது முறையாக ஹஜ் செய்த போது கொண்டு வந்த தட்டில் வைத்து கொண்டு வா என்று கூறினார். நான் ஹஜ் செய்துள்ளேன் என்பதை காட்டுவதே அவரது நோக்கமாக இருந்தது. இதனைக் கேட்ட அந்த தூய நல்ல மனிதராக இருந்த பெரியவர் விருந்துக்கு அழைத்த நபரிடம் கருணை காட்டப்பட வேண்டிய நிலைமையில் நீங்கள் இருக்கின்றீர்கள். இவ்வாறு உங்களது நற்செயலை வெளிப்படுத்திக் காட்டியதன் மூலம் நீங்கள் செய்த மூன்று ஹஜ்ஜுகளையும் நீங்கள் வீணாக்கி விட்டீர்கள் என்று கூறினார்.

வேதத்தின் எந்தவொரு போதனைகளின்படியும் செயல்படுவதன் நோக்கம் நஃப்ஸ் தூய்மையடைவதாக இருக்க வேண்டும் என்பதை எப்போதும் நாம் நினைவில் வைத்திருக்க வேண்டும். இதனால்தான் இந்த வசனங்களில் தூய்மையடைதலை அல்லாஹ் முதலில் குறிப்பிட்டுக் கூறியுள்ளான். மேலும் இந்த மகத்தான தூதரின் தூய நட்பில் இருந்தவர்கள் தங்கள் உள்ளங்களை தூய்மைடையச் செய்தார்கள். அத்துடன் இறை போதனைகளும் இறங்கிக் கொண்டிருந்தன. தக்வாவின் தரமும் உயர்ந்து கொண்டே இருந்தது. ஆனால், உள்ளங்களில் தூய்மை முதலில் உருவாகி விட்டது. சிறிது சிறிதாக அதில் வளர்ச்சி ஏற்பட்டது. சஹாபாக்களின் உள்ளம் ஆரம்பத்திலேயே தூய்மையடைந்து விட்டது. உதாரணமாக, மது தடை செய்யப்பட்ட அறிவிப்பைக் கேட்டதும் மது வைத்திருந்த குடங்கள் உடைக்கப்பட்டன. ஏன் அது தடை செய்யப்பட்டது? என்று அதற்கான காரணத்தை அவர்கள் கேட்கவில்லை. இறை கட்டளையின்படி உடனடியாக செயல்பட்டார்கள். எனவே, அசல் விஷயம் உள்ளங்கள் தூய்மையடைவதில் தான் இருக்கின்றது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தோற்றமும் அவர்களது ஒவ்வொரு செயலும் அவர்கள் எழுவதும் அமர்வதும் ஆகிய அனைத்துமே அகப்பார்வையுள்ளவர்களுக்கு ஓர் அடையாளமாக இருந்தது. அவர்களுக்கு மிக நெருக்கமானவர்களாக இருந்த ஹஸ்ரத் கதீஜா (ரலி), ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி), ஹஸ்ரத் அலி (ரலி) ஆகியோர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு வஹீ இறங்கியதுமே அவர்களை ஏற்றுக் கொண்டார்கள். பிறகு அறிவிலும் இறைஞானத்திலும் அவர்கள் முன்னேற்றத்தைப் பெற்றார்கள். அவர்கள் ஆரம்பத்திலேயே வேதத்தின் தெளிவான போதனைகளையும் அதன் ஞானங்களையும் தேடவில்லை.

ஹஸ்ரத் அபூபக்கர் ஸித்தீக் (ரலி) அவர்கள் எங்கோ வெளியில் சென்றிருந்தார்கள். அவர்கள் திரும்பி வந்த சமயத்தில் ஒரு நபர் அவர்களிடம் உங்களது நண்பர் இவ்வாறெல்லாம் வாதம் செய்கின்றார் என்று கூறினார். ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் நேரடியாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் சென்று நீங்கள் இவ்வாறு வாதம் செய்தீர்களா? என்று கேட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தனது வாதத்தைப் பற்றி விளக்கமாக அவர்களுக்கு எடுத்துக் கூற முயற்சி செய்தார்கள். ஆனால், ஹஸ்ரத் அபூபக்கர் ஸித்தீக் (ரலி) அவர்களோ எனக்கு உங்களுக்கு இறக்கப்பட்டுள்ள போதனைகள், அதன் நுட்பமான ஞானங்கள், அதற்கான ஆதாரங்கள் ஆகிய எதையும் நீங்கள் கூற வேண்டாம். நான் உங்களை சிறு வயதிலிருந்தே அறிந்தவனாக இருக்கின்றேன். உங்களைப் போன்ற தூய்மையான மனிதர் தவறான விஷயங்களை ஒருபோதும் கூற முடியாது என்று கூறினார்கள்.

எனவே, தூய்மைப்படுத்தக்கூடியவராக விளங்கிய ஹஸ்ரத் முஹம்மத் முஸ்தஃபா (ஸல்) அவர்களின் ஒவ்வொரு சொற்களிலும்கூட தூய்மை வெளிப்பட்டது. அதனால், ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை உடனடியாக ஏற்றுக் கொண்டார்கள். ஆனால், எவர்கள் அகத்தூய்மையற்றவர்களாக இருக்கின்றார்களோ அவர்கள் தெளிவான அடையாளங்களையும் வேதத்தின் ஞானம் நிறைந்த விஷயங்களையும் கண்ட பிறகும்கூட அவற்றை ஏற்றுக் கொள்ளாமல் இந்த அருள்களிலிருந்தும் புறக்கணிக்கப்பட்டவர்களாக ஆகி விட்டார்கள்.

தஸ்கியா அதாவது தூய்மைப்படுத்தலுக்கு பிறகு தஃலீமுல் கிதாப் அதாவது வேதத்தைக் கற்றுக்

கொடுப்பதை ஹிக்மத் அதாவது ஞானத்தைக் கற்றுக் கொடுப்பதற்கு முன்னதாக அல்லாஹ் எடுத்துக் கூறியுள்ளான். அதாவது வேதத்தைக் கற்றுக் கொடுப்பதை அல்லாஹ் முதலில் கூறியிருக்கின்றான். ஏனென்றால், உயர்வான ஈமானில் நிலைத்திருக்கும் நபர் தனது மிகவும் நேசத்திற்குரிய இறைவனின் கட்டளை என்ன? என்பதை பார்க்கின்றார். அவர் ஆதாரங்களை தேடமாட்டார். மாறாக, ***ஸமிஃனா வ அதஃனா*** அதாவது நாங்கள் கேட்டோம்; கட்டுப்பட்டு நடந்தோம் என்றே அவர்கள் கூறுவார்கள். நாங்கள் கட்டளையை கேட்டு விட்டோம். அதற்கு உள்ளத்தால் கட்டுப்பட்டு நடப்பவர்களாக நாங்கள் ஆகி விட்டோம் என்றே அவர்கள் கூறுவார்கள். எங்களது சென்றகால அனுபவங்களும் இதைத்தான் எங்களுக்கு நிரூபித்துக் காட்டியிருக்கின்றது. அதாவது ஒவ்வொரு கட்டளையின்படி செயல்பட்டதன் மூலம் எங்கள் உள்ளங்கள் தூய்மையடைந்தன. எனவே, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களே! உங்கள் மீது இறங்கியுள்ள இந்த போதனையிலும் ஏதாவது நுட்பமான ஞானம் நிச்சயமாக இருக்கும். அது எங்களுக்கு புரிந்தாலும் புரியாவிட்டாலும் எங்களது அசல் நோக்கம் உண்மையான நேசத்திற்குரிய இறைவனின் திருப்தியை பெறுவதேயாகும். அது இறைவனின் அன்பிற்குரிய உங்களுடன் (அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன்) இணைந்தவாறு அவர்கள் கூறுகின்ற ஒவ்வொரு சொல்லையும் செயல்படுத்துவதன் மூலமே எங்களுக்கு கிடைக்கும் என்றே அவர்கள் கூறுவார்கள்.

எனவே, இறை கட்டளைகளிலுள்ள நுட்பமான ஞானங்கள் பிறகுதான் அவர்களுக்கு புரிய வரும். ஆனால், தனது நேசத்திற்குரிய இறைவனின் கட்டளைகளுக்கு முதலில் அவர்கள் உடனடியாக கட்டுப்பட்டு நடக்கின்றார்கள். தத்துவவாதிகளும், பலவீனமான ஈமான் உள்ளவர்களும்தான் போதனைகளின் நுட்பமான ஞானத்தை தெரிந்து கொண்ட பிறகே அதில் நம்பிக்கை கொள்வோம் என்றும் கூறுகின்றார்கள்.

எனவேதான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் முதலில் பெரும் பெரும் விஷயங்களை ஏற்றுக்கொண்டு அவற்றில் ஈமான் கொள்வதை வலியுறுத்திக் கூறியுள்ளார்கள். ஆனால், தத்துவவாதிகள் அவ்விஷயங்களிலுள்ள நுட்பமான ஞானத்தை தேடி அலைந்து கொண்டிருப்பதால் அவர்களால் தூய்மையடைய முடியவில்லை. மனிதனிடம் கர்வம் வந்து விட்டால் பிறகு இப்படிப்பட்ட விஷயங்களை ஏற்றுக்கொள்வதற்கு அவனுக்கு வாய்ப்பு கிடைக்காமல் போய் விடுகிறது.

எனவே, முழுமையான நுட்பமான ஞானங்கள் பற்றிய அறிவு இருக்க வேண்டும் என்பது முழுமை பெற்ற ஒரு நம்பிக்கையாளருக்கு கண்டிப்பானதல்ல. அவர் ஈமான் கொள்வதற்கு அது அவசியமானதல்ல. ஏனென்றால், எவரது ஈமான் ஆதாரங்களின் அடிப்படையில் மட்டும் இருக்குமோ அவர் அந்த ஆதாரங்களின் நுட்பமான ஞானத்தைப் பெறுவது அவசியமாக இருக்கின்றது. அது பலவீனமான ஈமானின் அடையாளமாகும்.

எனவே, நபி ஒருவரை தூய்மைப்படுத்துவதும் அது தொடர்பான கட்டளையிடுவதும் அந்த கட்டளையை ஏற்று தனது உள்ளத்தை தூய்மைப்படுத்த அந்த நபியை ஏற்றுக் கொண்டவர்கள் முயற்சி செய்வதும் முழுமைபெற்ற ஈமானை உடையவர்களின் செயலாக இருக்கின்றது. குறையுள்ள பலவீனமான ஈமானை உடையவர்கள் போதனைகளின் நுட்பமான ஞானத்தை அறிவதற்காக அதை தேடுபவர்களாக இருக்கின்றார்கள். எனவே, எல்லா வகையான இயல்பிலுள்ள மக்களுக்காகவும் அல்லாஹ் தனது மகத்தான தூதர் மூலமாக ஒவ்வொரு கட்டளையையும் அதன் நுட்பமான ஞானத்துடன் விளக்கிக் கூறும் வகையிலுள்ள போதனைகளையே இறக்கியுள்ளான்.

எனவே, எல்லாவிதமான இயல்புக்கும் ஏற்ற முழுமையான போதனைகளை தன்னகத்தே கொண்டுள்ளதுதான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வழங்கிய போதனைகளின் சிறப்புத் தன்மையாகும்.

எனவே, நாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் போதனைகளுக்கேற்ப ஹிக்மத்தை அதாவது நுட்பமான ஞானத்தை தேடுவதை விட முதலில் நாம் முழுமை பெற்ற ஈமானைப் பெற்றுக் கொண்டவர்களாக ஆவதற்கு முயற்சி செய்ய வேண்டும். அதற்கு பிறகு நுட்பமான ஞானங்களும் நமக்கு புரிந்து விடும்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

நீங்கள் ஈமான் கொள்ளுங்கள். அப்போதுதான் இரட்சிப்பை பெறுவீர்கள் என்பதையே இறைவனின் வசனங்கள் நமக்குக் கற்றுத் தருகிறது. நபிமார்கள் எடுத்துக் கூறிய கொள்கைகளை ஏற்பதற்கு தத்துவரீதியான ஆதாரங்களையும், நிச்சய உறுதியை உங்களுக்கு தரக்கூடிய தெளிவுகளையும் அவர்களிடம் கேட்க வேண்டும் என்று அது நமக்குக் கற்றுத் தரவில்லை. கணித அறிவைப் போல் ஒவ்வொரு விஷயமும் தெளிவாக நிரூபிக்கப்படாத வரையில் (அதாவது ஒன்றுடன் ஒன்று சேர்ந்தால் இரண்டு என்பதுபோல் ஒரு விஷயம் தெளிவாக நிரூபணமாகாத வரையில்) அதை ஏற்றுக் கொள்ளக்கூடாது என்று கருதியவர்களாக கணித அறிவைப் போலத்தான் நபிமார்கள் கூறும் விஷயங்களை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று நீங்கள் கருதினால் வெளிப்படையாகப் பார்க்கும்போது அது நமக்கு கீழ்ப்படியாத நிலையாகும். மாறாக, ஒவ்வொரு உண்மையும் முழுமையாக திறக்கப்படும்போது அதை ஏற்றுக் கொள்வது கட்டாயமாகும். அதனை ஒரு நபி கூறினாலும் நபியல்லாதவர் கூறினாலும் அதை ஏற்றுக் கொள்வது கட்டாயமாகும். இப்படிப்பட்ட முழுமையாக தெளிவாகத் தெரிகின்ற உண்மையான விஷயங்களை ஒரு தீயவர் கூறினாலும் ஏற்றுக் கொள்ள வேண்டியது அவசியமாகும். நபிமார்கள் தெரிவிக்கும் செய்திகளில் எந்த செய்தியை ஒரு நபியின் உண்மைக்குரிய சான்றாக கருதி நாம் ஏற்றுக் கொள்வோமோ அது அறிவைக் கொண்டு பார்க்கும்போது மிக அதிகமான உண்மையை தன்னகத்தே கொண்டுள்ள செய்தியாக இருக்க வேண்டும். அத்துடன் அறிவற்றவர்கள் அதனை பொய் என்று யூகிக்கும் வகையிலும் அது இருக்க வேண்டும்.

அதாவது முழுமையாக சிந்திக்காதவர்களை பொய்யின் பக்கம் கொண்டு செல்லும் வகையிலும் அந்த செய்திகள் இருக்க வேண்டும். எல்லாமே மிகவும் தெளிவாக விளக்கிக் கூறப்படாத வகையில் செய்திகள் இருக்கும்.

அவ்வாறிருந்தும் உண்மையின் அம்சத்தைபுரிந்தவாறு நபியை உண்மையாளர் என்று கருதி தனது நல்லெண்ணம் தனது நுட்பமான தொலைநோக்கு பார்வை ஆகியவற்றின் மூலமாக அந் நபியை ஏற்றுக் கொண்டு தனது ஈமானுக்குரிய நற்கூலியை பெற்று கொள்வதுதான் திருக்குர்ஆனின் போதனைகளின் சாராம்சமாகும். இதனை நாம் விளக்கி கூறிவிட்டோம். ஆனால், ஞானத்தை தேடுபவர்களும் தத்துவவாதிகளும் இந்தஅம்சத்தை கைக்கொண்டு நடக்கவில்லை. அவர்கள் எப்போதும் ஈமானை பற்றிய அக்கறையில்லாமல் இருந்தார்கள். உடனடியாக மறுக்க முடியாத உறுதியான தெளிவாக உண்மையை திறந்து காட்டும் வகையிலுள்ள அறிவையே அவர்கள் தேடி கொண்டிருந்தார்கள். ஆனால், மறைவான செய்திகள் மீது ஈமான் கொள்ள வேண்டும் என்ற கட்டளையை தந்த இறைவன் நம்பிக்கையாளர்களை நிச்சய உறுதியை தரும் இறைஞானத்தை பெறுவதிலிருந்தும் விலக்கி வைக்க விரும்பவில்லை என்பதை நினைவிற்கொள்ள வேண்டும். மாறாக, நிச்சய உறுதியை தரும் இறைஞானத்தை பெறுவதற்கு ஈமான் ஒரு ஏணிப்படியாகும். இந்த ஏணிப்படியில் ஏறாமல் உண்மையான இறைஞானத்தை கேட்பது பெரும் தவறாகும். ஆனால் இந்த ஏணிப்படியில் ஏறுபவர்கள் தூய இறைஞானத்தையும், அவர்களுக்கு திருப்தியளிக்கக்கூடிய காட்சியையும் கண்டு கொள்வார்கள். ஈமான் கொள்கின்ற ஒரு உண்மையான மூமின் என்ற நிலையில் இறைவனது கட்டளைகளையும் அவன் தந்த செய்திகளையும் அவை ஒரு உண்மையான செய்திகளை தெரிவிப்பவர் மூலமாக அல்லாஹ்வால் எனக்கு வழங்கப்பட்டுள்ளன என்பதால் மட்டும் அவற்றை ஏற்றுகொள்வதாக இருந்தால் அப்படிப்பட்டவர் இறைஞானத்தின் பரிசை பெறுவதற்கு தகுதியுள்ளவராக கருதப்படுவார். முதலில் மறைவான செய்திகள் மீது ஈமான் கொண்டு

இறைவனுக்கு கட்டுப்படுபவர்களில் நுழைந்து அதற்கு பிறகு இறைஞானத்தின் உயர்தகுதிகளை பெற்று எல்லா முடிச்சுகளும் அதன் மூலம் திறக்கப்படவேண்டும் என்பதற்காகவே அல்லாஹ் தன் அடியார்கள் மீது இப்படிப்பட்ட ஒரு சட்டத்தை ஏற்படுத்தியுள்ளான். ஆனால் அந்தோ பரிதாபம்! அவசரப்படுகின்ற மனிதன் இவ்வழிகளை மேற்கொண்டு நடப்பதில்லை. எவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது வாதத்தின் மீது ஈமான் கொள்வாரோ அவர் கடின உழைப்பின் மூலமாகவும் முயற்சிகள் மூலமாகவும் அவ்வாதத்தின் உண்மை நிலையை கேட்டறிய விரும்பினால் அதனை அல்லாஹ் ஆன்மீக கஷ்பு காட்சிகள் மூலமாகவும் இல்ஹாம் மூலமாகவும் திறந்து தருவான் என்று அல்லாஹ் திருக்குர்ஆனில் வாக்குறுதி அளித்துள்ளான்.பிறகு அப்படிப்பட்டவரது ஈமான் இறைஞானத்தை பெற்றுக் கொள்ளும் வகையிலுள்ள உயர்வான படித்தரங்கள் வரை இறைவன் கொண்டு செல்வான்.

எனவே முழுமையான ஈமானை உடையவர்கள் ஆகுவதற்கு இந்த வழிகளை பின்பற்ற வேண்டியது அவசியமாகும்.

பிறகு இந்த இரு வசனங்களில் இன்னொரு வித்தியாசமும் இருக்கின்றது. அதாவது, ஹஸ்ரத் இப்றாஹீம் (அலை) அவர்கள் துஆ செய்ததை தெரிவிக்கும் (2:130) வசனத்திற்கும் அந்த துஆ ஏற்றுக் கொள்ளப்பட்டதாக அல்லாஹ் அறிவிக்கும் வசனத்திற்கும் இடையில் அவற்றின் சொற்களில் இன்னொரு வித்தியாசம் இருக்கின்றது. ஹஸ்ரத் இப்றாஹீம் (அலை) அவர்கள் தனது துஆவின் இறுதியில் **இன்னக்க அன்தல் அஸீஸுல் ஹகீம்** நிச்சயமாக நீயே வல்லோனும், ஞானமிக்கோனும் ஆவாய் (2:130) என்று கூறுகின்றார்கள். அல்லாஹ் அவர்களது துஆவை ஏற்று கொண்டு பதில் கூறும் போது ***வ யுஅல்லிமுகும் மா லம் தகூனு தஃலமூன்*** அந்த தூதர் நீங்கள் அறியாதவற்றை உங்களுக்குக் கற்றுத் தருவார் (2:152) என்று கூறுகின்றான். இந்த வித்தியாசத்தை விளக்கியவாறு ஹஸ்ரத் முஸ்லீஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறியுள்ளார்கள்.

ஹஸ்ரத் இப்றாஹீம் (அலை) அவர்கள் அஸீஸும் ஹகீமான அதாவது வல்லோனும், ஞானமிக்கோனுமாகிய இறைவனின் இந்த பண்புகளை பொருட்டாக வைத்து அவனிடம் துஆ செய்தார்கள். அதாவது, நான் எதையெல்லாம் கேட்கின்றேனோ அவற்றை எனது எண்ணத்திற்கு ஏற்ப நான் உன்னிடம் கேட்கிறேன். ஆனால், எந்த காலத்தில் இந்த மகத்தான தூதர் தோன்ற வேண்டுமோ அக்காலத்தின் தேவைகளையும் கியாமத் நாள் வரை அம்மகத்தான தூதரின் போதனைகள் மக்களை தூய்மைப்படுத்தி அவர்களுக்கு ஞானத்தை வழங்கவேண்டியிருப்பதால் இனி வரவிருக்கும் காலங்களிலுள்ள தேவைகளையும் நீ எல்லோரையும் விட சிறந்த முறையில் அறிந்தவனாக இருக்கின்றாய். எனவே, அந்த காலங்களில் நீ உனது அஸீஸ் (வல்லோன்) மற்றும் ஹகீம் (நுட்பமான ஞானமுள்ளவன்) என்ற பண்புகள் மூலம் அந்த காலத்தின் தேவைகளை அந்த நபியின் மூலம் பூர்த்தி செய்ய வேண்டும் என்று ஹஸ்ரத் இப்றாஹீம் (அலை) அவர்கள் அல்லாஹ்விடம் துஆ செய்தார்கள்.

அல்லாஹுதலா இந்த துஆவை ஏற்று கொண்டு இந்த வசனத்தில் அந்த மகத்தான தூதர் இந்த இந்த பணிகளை செய்வார் என்று கூறிய பிறகு இறுதியில் ***வ யுஅல்லிமுகும் மா லம் தகூனு தஃலமூன்*** அதாவது நீங்கள் இதற்கு முன்னர் அறிந்திராத பல விஷயங்களையும் இந்த தூதர் உங்களுக்குக் கற்றுத் தருவார் (2:152) என்று கூறியுள்ளான்.

இந்த மகத்தான தூதர் மீது இறங்கியுள்ள வசனங்களிலும் அவருக்கு அருளப்பட்ட வேதத்திலும் நீங்கள் இதற்கு முன்னர் அறிந்திராத பல விஷயங்களும் உள்ளன. இந்த நபி வழங்கிய போதனைகளில் கடந்த காலத்தில் அருளப்பட்ட போதனைகளை விட அதிகப்படியான விஷயங்கள் கூறப்பட்டுள்ளன. சில முன்னறிவிப்புகள் அவற்றில் உள்ளன. அந்தந்த காலத்தில் தான் மனிதனால் அந்த முன்னறிவிப்புகள் நிறைவேறியுள்ளதை அறிந்து கொள்ள முடியும். அவை அந்தந்த காலத்தில் தான் வெளிப்படும். அவற்றில் சில விஷங்களை நான் சென்ற குத்பாவில் கூறியிருந்தேன்.

அல்லாஹ் திருக்குர்ஆனில் **முஹ்கமாத்** (உறுதியான வசனங்கள்) பற்றியும் **முதஸாபிஹாத்** (உவமை வடிவிலான வசனங்கள்) பற்றியும் கூறியுள்ளான். அல்லாஹ் கூறுகின்றான்:

அவனே இவ்வேதத்தை உமக்கு இறக்கினான். இதில் சில வசனங்கள் உறுதியானவை. இவையே இந்நூலின் அடிப்படை. மற்றவை உவமை வடிவிலானவை. (3:8) **முஹ்கமாத்** அதாவது உறுதியான வசனங்களை தந்த இறைவன் நீங்கள் இதற்கு முன்னர் அறிந்திராத விஷயங்களை நாம் இறக்கியுள்ளோம் என்பதையே கூறுகின்றான். முதஸ்ஸாபிஹாத்தான வசனங்களை தந்த இறைவன் அதன் மூலமாக இதற்கு முன்னுள்ள வேதங்களிலுள்ள விஷயங்களையும் நாம் இவ்வேதத்தில் இடம்பெற செய்துள்ளோம் என்று கூறுகின்றான். அதாவது அப்போதனைகளில் சில மிகவும் தெளிவாக உள்ளன. சில போதனைகள் சிந்தித்து தான் உணர முடியும்.

**முஹக்கம்** என்ற சொல்லிற்கான பொருள் அகராதியில் இவ்வாறு வந்துள்ளது.

எல்லாவிதமான இடைச்சேர்க்கையிலிருந்தும் மாற்றத்தில் இருந்தும் பாதுகாக்கப்பட்ட ஒன்றே **முஹக்கம்** எனப்படும்.

**இரண்டாவது பொருள்:** அதில் எவ்வகையான சந்தேகத்திற்கும் இடம் இருக்காது.

**மூன்றாவது பொருள்:** அது தனது பொருளின் அடிப்படையிலும் அதன் மகிமையின் அடிப்படையிலும் மறுக்க முடியாத தீர்ப்பாக இருக்கும்.

இவையே **முஹக்கமாத்** ஆகும்.

**முதஸ்ஸாபிஹாத்** என்பதன் பொருள் என்னவென்றால், எதற்கு நாம் பல்வேறு பொருள்களை கொடுக்க முடியுமோ அதுவே முதஸாபிஹாத்தாகும். அல்லது எதனுடைய சில பகுதிகள்அதே போன்ற வேறு சில பகுதிகளை ஒத்ததாக இருக்கின்றதோ அதற்கு **முதஸ்ஸாபிஹாத்** என்று நாம் கூறுவோம்.

இப்போது எவர்கள் தஸ்தியா அதாவது தூய்மையடைதலை பொறாதவர்களாக இருக்கின்றார்களோ அவர்கள் இப்படிப்பட்ட வசனங்களிலுள்ள தூதுச் செய்தியை எப்படி புரிந்து கொள்ள முடியும்?

**முதஸ்ஸாபிஹாத்** என்பதன் இன்னொரு பொருள் அதன் உண்மையான பொருளானது உறுதியான **(முஹ்க்கமாத்)** வசனங்களுக்கு எதிரானவையாக இருக்கக் கூடாது என்பதாகும். சில நேரங்களில் சில வெளிப்படையான சொற்கள் மனிதனை சந்தேகத்தில் ஆழ்த்திவிடும். ஆனால், அதன் உண்மையான பொருள் இவ்வேதத்தின் அடிப்படையாக இருக்கின்ற உறுதியான வசனத்திற்கு எதிரானதாக இருக்க கூடாது. அதற்கு எதிராக அமைந்தால் பிறகு அதற்கான காரணத்தை தேட வேண்டும். எனவே, இப்படிப்பட்ட உவமை வடிவிலான முதஸ்ஸாபிஹாத்தான வசனங்களின் கருத்தை உறுதியான முஹக்கமாத் வசனங்களுக்கு ஒத்ததாக பொருந்தும் அளவில் அவற்றை நாம் புரிந்துகொள்ள முயற்சி செய்ய வேண்டும். உண்மையான சிந்தனையுடன் சரியான வழியில் சிந்திக்காமல் இருந்தால் முதஸ்ஸாபிஹாத்தான வசனங்களை புரிய முடியாது என்பதும் முதஸ்ஸாபிஹாத் என்ற அந்த சொல்லின் கருத்தாக இருக்கின்றது. இவற்றை புரிவதற்கு உள்ளங்களை தூய்மைபடுத்தியவாறு அல்லாஹ்வின் உதவியை கேட்பது அவசியமாகும்.

எனவே, எவனது வல்லமையின் பிடியில் ஒவ்வொரு பொருளும் இருக்கின்றதோ அந்த அஸீஸான (வல்லோனான) இறைவன் தன்னால் தூய்மை யாக்கப்பட்ட அந்த உள்ளங்களின் கதவுகளை திறந்தால் அப்படிப்பட்டவர்களுக்கு அவன் தனது நுட்பமான ஞானத்தின் முத்துக்களை ஒன்று திரட்டுவதற்கான வாய்ப்பை வழங்குகின்றான்.

தூய்மைபடுத்தும் மகத்தான தூதராக விளங்கிய ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை பின்பற்றியவாறு ஒவ்வொரு நூற்றாண்டிலும் **முஜத்தித்கள்** என்ற ஆன்மீக

சீர்திருத்தவாதிகள் தோன்றி கொண்டே இருந்தார்கள் அவர்கள் இந்த வசனங்கள் மூலமாகவும் இந்த போதனைகள் மூலமாகவும் உள்ளங்களை தூய்மைபடுத்தும் அந்த பணிகளை செய்துகொண்டே இருந்தார்கள்.

ஆலிம்களும், புகஹாக்கள் என்ற மார்க்க சட்ட மேதைகளும் தோன்றிக் கொண்டே இருந்தார்கள். அவர்கள் இறைகட்டளைகளை விளக்கி கூறினார்கள். அவற்றின் நுட்பமான ஞானத்தை கற்று தந்தார்கள். அவர்கள் பொருத்தமற்ற பேச்சுக்களை பேசுகின்ற இன்றைய பெயர்தாங்கி ஆலிம்கள் போல் இருக்கவில்லை.

1974ஆம் ஆண்டு பைஸலாபாத்தில் நடந்த ஒரு சம்பவம் எனக்கு நினைவில் வருகின்றது. ஒரு பள்ளி வாசலில் ஒரு மௌலவி சாஹிப் சூரா இக்லாஸ் (குல் ஹுவல்லாஹு அஹத் என ஆரம்பிக்கும்) சூராவை ஓதி குத்பா கொடுத்தார். குல் ஹுவல்லாஹு அஹத் என்ற வசனத்தை ஓதிய பிறகு அதற்கு விளக்கம் கூறுகையில் திருக்குர்ஆனில் இருந்தும் அஹ்மதி என்று தங்களை கூறும் மிர்ஸாயிகள் காஃபிராவார்கள் என்பது தெரிய வருகிறது என்று கூறினார். அந்த சூராவில் இருந்து ஏதாவது நிரூபணமாகின்றதென்றால் அது இறைவனுக்கு மகனை ஏற்படுத்துபவர்கள் தவறு செய்பவர்களும் பொய்யர்களும் ஆவார்கள் என்பதுதான் நிரூபணமாகின்றது. அவ்வாறே கபுரை வணங்குபவர்களும் தவறான வழிகளை மேற்கொண்டு பீர்களை வணங்குபவர்களும் பொய்யர்கள் என்பதை இந்த சூரா மூலம் நாம் நிரூபிக்க முடியும். ஆனால், நாங்களோ தூய்மைபடுத்தக்கூடிய அந்த மகத்தான தூதரின் உண்மை பேரன்பரை ஏற்றுக் கொண்டவர்களாக இருக்கின்றோம். அவர்களை ஏற்று கொண்டவர்களுக்கு தனது இல்ஹாம் மூலம் இறைவன் ***ஹீதுத் தவ்ஹீது அத்தவ்ஹீது யா அப்னாஅல் ஃபாரிஸ்*** பாரசீக புதல்வர்களே! நீங்கள் தவ்ஹீதை அதாவது ஏகத்துவத்தை பற்றி பிடியுங்கள். நீங்கள் ஏகத்துவத்தை பற்றி பிடியுங்கள் என்ற தூதுச் செய்தியை வழங்கியுள்ளான்.

எனவே, இவ்வாறு கூறுகின்ற இவர்கள் தான் பொய்யர்கள் நாங்கள் பொய்யர்கள் அல்ல.

அல்லாஹுத்தஆலா தனது இந்த போதனைகளை பாதுகாப்பதற்கான ஏற்பாட்டை செய்துள்ளான். இறுதியில் இறைவன் இந்த தூய்மைபடுத்தக்கூடிய மகத்தான தூதரிடம் செய்த வாக்குறுதிகளுக்கு ஏற்ப வாக்களிக்கப்பட்ட மஸீஹையும், மஹ்தியையும் அனுப்பி வைத்தான். அவர்கள் காத்தமுல் குலஃபாவாக இருக்கின்றார்கள். திருக்குர்ஆனில் அல்லாஹ் இதுபற்றி இவ்வாறு கூறுகின்றான்.

அவனே எழுதப்படிக்கத் தெரியாத மக்களுக்கு அவர்கள் இதற்கு முன்னர் தெளிவான வழிகேட்டில் இருந்த போதிலும் அவனது கட்டளைகளை படித்துக் காட்டி அவர்களை தூய்மைப்படுத்தி, அவர்களுக்கு வேதத்தையும் நுட்பமான அறிவையும் கற்றுக் கொடுக்கும் ஒரு தூதரை அவர்களிலிருந்தே அனுப்பினான்.

மேலும் இதுவரை, அவர்களுடன் சேராத மற்றவர்களுக்கிடையிலும் (அவரை எழுப்புவான்) அவன் வல்லமை மிக்கவனும் நுண்ணறிவுள்ளவனும் ஆவான். (62:3,4)

இந்த வசனங்களில் முதல் வசனத்தில் எழுதப்படிக்கத் தெரியாத மக்களுக்கு மத்தியில் ஒரு மகத்தான தூதர் அனுப்பப்படும் செய்தி இருக்கின்றது. இங்கு மீண்டும் ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் செய்த துஆ ஏற்றுக் கொள்ளப்பட்டதாக இறைவன் அறிவிக்கின்றான். இதற்கு முன்னர் அவர்கள் தெளிவான வழிகேட்டில் இருந்ததாகவும் இறைவன் தெளிவாக அறிவித்துள்ளான். சூரா ஆலே இம்ரானின் 165-வது வசனத்திலும் அந்த மகத்தான தூதரின் நான்கு சிறப்பு தன்மைகளை குறிப்பிட்டுக் கூறிய பிறகு அவ்வசனத்தின் இறுதியிலும் அவர்கள் இதற்கு முன்னர் மிகத் தெளிவான வழிகேட்டில் இருந்ததாக அல்லாஹ் கூறுகின்றான்.

கரையும், கடலும் குழப்பத்தில் ஆழ்ந்திருந்தது. அல்லாஹ் நம்பிக்கை யாளர்கள் மீது அருள் செய்தான். அவர்களுக்கு ஒரு மகத்தான தூதரை அவர்களிலிருந்தே எழுப்பினான். அந்த தூதர் அவர்களுக்கு வசனங்களை எடுத்தோதி அவர்களைத் தூய்மைப்படுத்தி வேதத்தின் போதனைகளையும்

அதன் நுட்பமான ஞானத்தையும் அவர்களுக்குக் கற்றுக் கொடுத்தார். அறிவீனர்களாக இருந்த அந்த அரபிகள் மத்தியில் அந்த தூதர் ஒரு மகத்தான புரட்சியை ஏற்படுத்தினார்.

அதற்கு பிறகு சூரா ஜுமுஆவின் வசனத்தில் அல்லாஹ் கூறுகின்றான்.

எந்த இறைவன் எழுதப்படிக்கத் தெரியாத அந்த மக்கள் மீது அருள் செய்தவாறு ஒரு தூதுரை அனுப்பினானோ அந்த மகத்தான தூதரின் காலம் முடிந்து விட்டதா? அதற்கடுத்த ஆயிரம் வருடங்களில் அதே இருள் நிறைந்த கால கட்டம் மீண்டும் வந்து விடுமோ? அல்லாஹ் இதற்கு முன்னர் தனக்கு இணைவைக்கின்ற முஷ்ரிகீன்கள் மீது அருள் செய்தவாறு அவர்களுக்கு மத்தியில் ஒரு மகத்தான தூதரை அனுப்பி இருக்கும் போது இருள் நிறைந்த காலகட்டத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உம்மத்திலுள்ளவர்கள் செய்த துஆக்களை கேட்டவாறு அவர்கள் மீது அருள் செய்யாமல் எப்படி விட்டு விடுவான்? இதில் எவ்வித மகிமையுமில்லை. கியாமத் நாள் வரை இவ்வேதத்தின் போதனைகள் பாதுகாக்கப்படும் என்ற வாக்குறுதி இதன் மூலம் நிறைவேறாமல் போய் விடும். எனவே, இவ்வாறு யாராவது நினைப்பதாயிருந்தால் அவர் அல்லாஹ்வின் மீது தப்பெண்ணம் கொள்கின்றார். ஏனென்றால் அல்லாஹ் எப்படிப்பட்டவன் என்றால் விண்ணிலும் மண்ணிலும் இருக்கின்ற எல்லா பொருள்களும் அவனது தூய்மையை எடுத்துரைக்கின்றன. அவனை புகழ்கின்றன. அவன் வல்லோன். எல்லாவற்றின் மீதும் தனது ஆற்றலில் மிகைத்து நிற்பவன். எனவே இப்படிப்பட்ட அஸீஸும் ஹகீமுமாக இருக்கும் இறைவனிடம் நாம் இப்படிப்பட்ட எதிர்பார்ப்பை வைக்கலாமா? அவன் இந்த உலகத்தை வழிகேட்டில் விட்டு விடுவான் என்று நாம் எதிர்பார்க்கலாமா? உலகின் இரட்சிப்பிற்காக வந்துள்ள அந்த இறுதி போதனைகள் பாதுகாக்கப்படாமல் இருப்பது ஞானமுள்ள செயலாகுமா? இறைவனை பற்றிய இத்தகைய எண்ணம் ஒரு குறுகிய எண்ணமாகும். அது அவன் மீது கொள்ளும் தப்பெண்ணமாகும்.

ஹஸ்ரத் முஹம்மத் முஸ்தஃபா (ஸல்) அவர்களுடன் தங்களை தொடர்புபடுத்தி கூறுகின்ற மக்களே! எந்த நபியின் போதனைகள் கியாமத் நாள் வரை உள்ளங்களை தூய்மைபடுத்துவதற்கு உரிய வழியாக இருக்கின்றதோ அந்த நபியுடன் நீங்கள் உங்களை தொடர்புபடுத்திக் கூறுகின்றீர்கள். அந்த மகத்தான தூதரின் போதனைகளை குறுகிய வட்டத்தில் அல்லாமல் மிக விரிவான வட்டத்தில் மேலோங்கச் செய்து அதன் மூலம் மக்களை தூய்மைப்படுத்தி பலவீனமான உள்ளங்களை உடையவர்களையும், உலக வாதிகளையும், தத்துவ வாதிகளையும், நேர்வழியில் கொண்டு வந்து அவர்களிடம் தூய்மை மற்றும் நுட்பமான ஞானத்தின் விதைகளை விதைப்பதற்கு பின்னவர்களிடம் மீண்டும் இந்த தூதர் எழுப்பப்படுவார். அந்த நபி தனது பௌதீக உடலுடன் தோன்றமாட்டார். மாறாக அவரது நிழல் போன்ற தோற்றமே நிகழும். இது அந்த வல்லோனும் ஞானமிக்கோனுமாகிய இறைவனின் தீர்ப்பாகும். இறைவனது ஆற்றல்கள் ஓர் குறிப்பிட்ட எல்லைக்கு உட்பட்டவை என நீங்கள் கருத வேண்டாம். அவனது தீர்ப்புகள் நுட்பமான ஞானமில்லாமல் இருப்பவை என நீங்கள் நினைக்க வேண்டாம். எவ்வாறு அந்த மகத்தான தூதர் ஒரு தூய ஜமாஅத்தை நிறுவினார்களோ, சீர்குலைந்து போனவர்களை இறைவனுடன் சந்திக்க வைத்தார்களோ அந்த நபியின் அடிமையும் இன்று இக்காலத்தில் சீர்குலைந்து போனவர்களை இறைவனை சந்திக்க வைக்கின்ற அந்த பணியை செய்வார்.

சூரா ஜுமுஆவின் இந்த வசனம் இறங்கிய போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் அவர்களின் தோழர்கள், பின்னவர்கள் என்பவர்கள் யார்? என்ற கேட்டார்கள். அதற்கு அவர்கள் ஹஸ்ரத் ஸல்மானுல் ஃபார்ஸி (ரலி) அவர்களின் தோளில் கை வைத்து ஈமான் கார்த்திகை நட்சத்திரம் வரை சென்று விட்டாலும் இவரது வழித்தோன்றல்களில் ஒருவர் அதனை திரும்ப பூமிக்கு கொண்டு வருவார் என்று பதிலளித்தார்கள்.

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறும் கூறியுள்ளார்கள்.**

மக்களில் ஒரு காலம் வரும். திருக்குர் ஆனில் அதன் சொற்களை தவிர வேறு எதுவும்

எஞ்சியிருக்காது. இஸ்லாத்தின் பெயரை தவிர வேறு எதுவும் எஞ்சியிருக்காது.

சிந்திக்கின்ற மூளை உள்ள ஒவ்வொருவரும் பார்க்கும் கண்களை உடைய ஒவ்வொருவரும் இன்றைய நிலைமை இப்படித்தான் இருக்கின்றது என்பதை வெளிப்படையாக கூறுகின்றார்கள்.

அல்லாஹ் இந்த மகத்தான தூதரை அனுப்பி அவர் தோற்றுவித்த மார்க்கம் கியாமத் நாள்வரை பொலிவுடனும் மகிமையுடனும் நிலைத்து நிற்பதற்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மை பேரன்பரை இந்த உலகிற்கு அனுப்பி வைத்துள்ளான்.

அஹ்மதி என்று நம்மை கூறிக்கொள்கின்ற நமக்கு இப்போது இரு பொறுப்புகள் உள்ளன. **முதலாவதாக, உங்களைத் தூய்மைப்படுத்தி இந்த வேதத்தின் போதனைகளின்படி செயல்படுவதன் பக்கம் நிரந்தரமாக கவனம் செலுத்துங்கள். இரண்டாவதாக, இந்த தூதுச் செய்தியை ஒவ்வொரு நபருக்கும் எட்ட வைப்பதற்காக ஒரு சிறப்புமிக்க உணர்வுடன் செயல்பட வேண்டும்.** எங்களிடம் இந்த தூதுச் செய்தி வந்து சேரவில்லை என்ற காரணத்தை எவரும் கூறிவிடக் கூடாது. இன்று அஹ்மதிகள் தவிர முஸ்லிம் உம்மத்தை பாதுகாக்கும் பணி வேறு எவரிடமும் ஒப்படைக்கப்படவில்லை. இஸ்லாத்தில் பெரும் பெரும் பெயர் தாங்கி கூஷிஹீநிமூமீதிநிற் கள் நமது பார்வையில் வருவார்கள். ஒவ்வொருவரும் சீர்திருத்தம் செய்யவே நாங்கள் வந்துள்ளோம் என்றே கூறுவார்கள். ஆனால், அல்லாஹ் இந்த பணியை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பராகிய வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடமே ஒப்படைத்துள்ளான். அவர்கள் மூலமாகவே இந்த பணி நிறைவு பெறும். முஸ்லிம் சமுதாயம் இன்று எதிரிகளின் வலையில் சிக்கித் தவிக்கின்றது. அவர்களது உள்ளங்களிலுள்ள தூய்மை அழிந்து விட்டது. கிலாஃபத்தை ஏற்படுத்த வேண்டும் என்று சில சமயம் குரலெழுப்பப்படுகிறது. ஆனால் இப்படிப்பட்ட இழிவான நிலை நமக்கு ஏன் ஏற்பட்டுள்ளது என்பதைப் பற்றி இவர்கள் சிந்திக்கவில்லை. அல்லாஹ் இவர்களுக்கு அறிவை வழங்குவானாக!

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இது தொடர்பாக விளக்கியவாறு இவ்வாறு கூறியுள்ளார்கள்:**

இந்த வசனத்திலிருந்து கிடைக்கும் பொருள் என்னவென்றால், அந்த இறைவன் எப்படிப்பட்ட இறைவன் என்றால் மக்கள் அறிவிலிருந்தும் நுட்பமான ஞானத்திலிருந்தும் முற்றிலும் விலகியிருந்த காலகட்டத்தில் அல்லாஹ் அந்த மகத்தான தூதரை அனுப்பினான். மேலும் நஃப்ஸை முழுமைப்படுத்தக்கூடிய நுட்பமான மார்க்க ஞானத்தை வழங்கி அதன் மூலம் மனிதனின் ஆன்மா அறிவிலும் செயலிலும் முழுமை அடைவதற்கு அவன் அருள் செய்தான். மக்கள் வழிகேட்டில் ஆழ்ந்து இருந்தார்கள். இறைவனை விட்டும் நேரான வழியை விட்டும் அவர்கள் வெகு தொலைவில் சென்று விட்டார்கள். அப்போது இறைவன் எழுதப் படிக்கத் தெரியாத தனது தூதரை அனுப்பினான். அந்த தூதர் அந்த மக்களது உள்ளங்களை தூய்மைப்படுத்தினார். வேதத்தின் போதனைகளாலும் அதன் நுட்பமான ஞானங்களாலும் அவர்களை நிரப்பினார். அதாவது, அடையாளங்கள் மூலமாகவும் அற்புதங்கள் மூலமாகவும் முழுமையான நிச்சய உறுதியைப் பெறுகின்ற தகுதி வரை அவர்களை கொண்டு சென்றார். இறைவனை அடையாளம் கண்டு கொள்ளும் ஒளியின் மூலமாக அவர்களது உள்ளங்களை ஒளிமயமாக்கினார்.

அதன் பிறகு அல்லாஹ் கூறுகின்றான். இன்னொரு பிரிவினர் உள்ளனர். அவர்கள் இறுதிக் காலத்தில் வெளிப்படுவார்கள். அவர்களும் ஆரம்பத்தில் இருளிலும் வழிகேட்டிலும் இருப்பார்கள். அறிவு, நுட்பமான ஞானம், நிச்சய உறுதி ஆகியவற்றிலிருந்தும் அவர்கள் மிகத் தொலைவில் விலகியிருப்பார்கள். அப்போது இறைவன் அவர்களையும் சஹாபாக்களின் நிறத்தைப் பெற்றவர்களாக மாற்றுவான். அதாவது, சஹாபாக்கள் எதைக் கண்டார்களோ அது அவர்களுக்கும் காட்டப்படும். எதுவரையென்றால், அவர்களது உண்மையும் நிச்சய உறுதியும் சஹாபாக்களின் உண்மை மற்றும் நிச்சய

உறுதி போல் ஆகி விடும்.

சஹீஹான ஹதீஸில் இந்த வசனத்திற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் விளக்கம் அளித்தபோது ஹஸ்ரத் ஸல்மான் ஃபார்ஸி (ரலி) அவர்களின் தோல் மீது கை வைத்து **லவ் கானல் ஈமானு முஅல்லகன் பிஸ்ஸுரைய்யா லனாலஹு ரஜுலுன் மின் ஃபாரிஸ்** - ஈமான் கார்த்திகை நட்சத்திரம் வரை சென்று விட்டாலும் கூட பாரசீக வழித்தோன்றல்களிலிருந்து ஒரு மனிதர் அதனை திரும்பக் கொண்டு வருவார். ஒரு மனிதர் இறுதிக் காலத்தில் பாரசீக வழித்தோன்றல்களிலிருந்து பிறப்பார். அவர் தோன்றும் காலம் தொடர்பாக அக்காலத்தில் குர்ஆன் வானத்திற்கு உயர்த்தப்பட்டு விடும் என்று எழுதப்பட்டிருக்கின்றது. இந்த காலம் தான் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் காலமாகும். பாரசீக வழித்தோன்றல்களிலிருந்து தோன்றிய அவரது பெயரே வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஆகும். ஏனென்றால், சிலுவைத் தாக்குதல்களை முறியடிப்பதற்கு வாக்களிக்கப்பட்ட மஸீஹ் வரவேண்டிய திருக்கின்றது. அந்த தாக்குதல் ஈமான் மீது தொடுக்கப்பட்டிருக்கின்றது. இதனால் மக்களது ஈமானில் தீய விளைவுகள் ஏற்படும் என எழுதப்பட்டிருக்கின்றது. இந்த தாக்குதலையே வேறு சொற்களில் தஜ்ஜாலிய தாக்குதல் என்று நாம் கூறுகிறோம். அடையாளங்களில் அந்த தஜ்ஜாலின் தாக்குதல் நடத்தப்படும்போது பல அறிவிலிகள் இணையற்ற அந்த ஏக இறைவனை கைவிட்டு விடுவார்கள் என்று கூறப்பட்டுள்ளது. பல மக்களது ஈமானில் உள்ள நேசம் குளிர்ந்து விடும். வாக்களிக்கப்பட்ட மஸீஹின் மிகப்பெரிய பணி ஈமானை புதுப்பிப்பதாக இருக்கும். ஏனென்றால், ஈமானின் மீது தாக்குதல் இருக்கும். ஹதீஸில் பாரசீக வழித்தோன்றல்களிலிருந்து தோன்றும் அந்த நபர் ஈமானை நிலை நிறுத்துவதற்காக வருவார் என்று கூறப்பட்டுள்ளது.

**பிறகு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

சிந்தனை செய்து பாருங்கள்! 1300 வருடங்களில் நபித்துவ வழியைப் பேணும் இக்காலம் வேறு யாருக்குக் கிடைத்திருக்கின்றது. நமது ஜமாஅத் உருவாகியுள்ள இந்த காலத்தில் பல காரணங்களால் இந்த ஜமாஅத் சஹாபா ரிழ்வானுல்லாஹி அலைஹிம் உடன் ஒப்புமை இருக்கிறது. சஹாபாக்கள் கண்டதுபோன்று இவர்களும் அடையாளங்களையும் அற்புதங்களையும் கண்டுள்ளனர். மேலும் இவர்கள் இறைவனின் அடையாளங்கள் மூலமாகவும் புத்தம்புது இறையொளி மூலமாகவும் நிச்சய உறுதியை பெற்றுள்ளனர். சஹாபாக்களுக்கு ஏற்பட்டதுபோன்று இறைவனது வழியில் உறவு துண்டிக்கப்படுதல் பிறரால் எள்ளி நகையாடி பரிகாசம் செய்யப்பட்டு சாபமிடப்பட்டு பல்வேறு கொடுமைகளுக்கு இலக்காகுதல் போன்ற பல துன்பங்களை சுமக்கும் நிலை இவர்களுக்கும் ஏற்பட்டுள்ளது. சஹாபாக்களுக்கு கிடைத்ததுபோன்ற இறை உதவிகளும் நுட்பமான ஞானம் நிறைந்த போதனைகளும் இவர்களுக்கு கிடைத்ததன் விளைவாக சஹாபாக்களுக்கு கிடைத்தது போன்ற தூய வாழ்க்கை இவர்களுக்கும் கிடைத்திருக்கின்றது.

இவர்களில் பலரும் தொழுகையில் அழுகின்றனர். அவர்கள் சஜ்தா செய்யும் இடங்களை கண்ணீரால் நனைக்கின்றனர். சஹாபாக்கள் அழுதது போன்றே இவர்களும் அழுகின்றார்கள். இவர்கள் பலருக்கும் உண்மையான கனவுகள் வந்திருக்கின்றன. மேலும் இவர்களுக்கு இறைவனிடமிருந்து இல்ஹாம் கிடைக்கும் நற்பேறும் கிடைத்திருக்கின்றது. இவ்வாறு சஹாபாக்களுக்கும் இத்தகைய நற்பாக்கியங்கள் கிடைத்திருந்தன. சஹாபாக்களைப் போன்றே இவர்களில் பலரும் தங்களது உழைப்பால் சம்பாதித்த செல்வங்களை இறைவனது திருப்தியைப் பெறுவதற்காக மட்டும் நமது இயக்கத்திற்காக செலவு செய்கின்றார்கள். மரணத்தை நினைவுகூர்ந்து உள்ளத்தில் இறையச்சத்துடன் செயல்படும் பலரை இவர்களில் நான் காண்கின்றேன். இவ்வாறே சஹாபாக்களின் வாழ்க்கையும் இருந்தது. இவர்கள் இறைவனின் கூட்டமாக இருக்கின்றார்கள். இறைவனே அவர்களை பாதுகாக்கின்றான். மேலும் ஒவ்வொரு நாளும் இறைவன் இவர்களைத் தூய்மைப்படுத்தி வருகின்றான். மேலும் இவர்களது

நெஞ்சங்களை ஈமானின் நுட்பமான ஞானத்தால் அவ்விறைவன் நிரப்புகின்றான். விண்ணின் அடையாளங்கள் மூலம் அவர்களை தன் பக்கம் ஈர்க்கின்றான். இவ்வாறே சஹாபாக்களையும் அல்லாஹ் தன் பக்கம் ஈர்த்துக் கொண்டு வந்தான். சுருக்கமாக, இந்த ஜமாஅத்தில் வ ஆகரீன மின்ஹும் என்ற சொற்களில் உள்ள எல்லா அடையாளங்களும் இருக்கின்றது. நிச்சயமாக அல்லாஹ்வின் கூற்று ஒரு நாள் நிறைவேறவேண்டியதிருக்கின்றது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) ஏற்படுத்திய இந்த மகத்தான புரட்சியைத் தொடர்ந்து நீடிக்கும்படி செய்வது ஜமாஅத்தின் ஒவ்வொரு நபரின் கடமையாக இருக்கின்றது. அவ்வாறு இல்லையென்றால் இதற்கு முன்னர் தங்களது ஈமானை வீணாக்கியவர்கள் போன்று நாமும் நமது ஈமானை வீணாக்கிய நிலையில் பாவிகளாக ஆகி விடுவோம். இந்த வேதத்தின் போதனைகளை தங்களது வாழ்வில் செயல்படுத்தக்கூடிய மக்கள் பிறந்து கொண்டேதான் இருப்பார்கள். இன்ஷா அல்லாஹ். ஆனால், இந்த போதனைகளிலிருந்தும் ஒருபோதும் முகந்திருப்பிச் செல்லக்கூடியவர்களாக நம்மில் ஒரு நபர் கூட ஆகிவிடக் கூடாது. அதற்காக நாம் முயற்சி செய்ய வேண்டும். ஒருபோதும் நாம் நமது உள்ளத்தின் தூய்மையை அழிக்கக்கூடியவர்களாக இருக்கக்கூடாது. அல்லாஹ் இதற்கான நல்வாய்ப்பினை நம் அனைவருக்கும் வழங்குவானாக! ஆமீன்.


| | |
|---|---|
| **KUTHBA**<br>***HAZRAT KHALIFATHUL MASIH V***<br>**AT BAITHUL FUTUH , LONDON**<br>**ON 01.02.08** | **TRANSLATED BY : M . RAFEEQ AHMAD**<br>**PUBLISHED BY: MAJLIS KHUDDAMUL AHMADIYYA - MELAPALAYAM,**<br>***Asura East Street, Melapalayam,***<br>***Tirunelveli - 627 005. Telefax : 0462-2352456*** |